## தமிழ்நாட்டில் 18 இடங்களில் அகழ்வாய்வுகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன!

# இந்தியாவிலேயே தமிழ் கல்வெட்டுகள்தான் அதிக அளவில் கிடைத்திருக்கின்றன!

## சட்டப் பேரவையில் 'தொல்லியல் துறை' மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

சென்னை, ஏப்.20–

**சட்டப் பேரவையில் தொல்லியல் துறை மானிய பதிலுரையில் இந்தியாவிலேயே தமிழ் கல்வெட்டுகள்தான் அதிக அளவில் கிடைத்திருக்கின்றன என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

**சட்டப் பேரவையில் தொல்லியல் துறை மீதான மானியக் கோரிக்கையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வருமாறு:–**

மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் துறை மீதான மானியக் கோரிக்கை மீது பதிலளிப்பதற்கான ஒரு வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உள்ளிட்ட முன்வரிசை கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களையெல்லாம் ஆளாக்கி, அரசியலிலே வழிகாட்டி, மறைந்திருக்கக்கூடிய ஆருயிர் தலைவர் கலைஞர் துயிலும் இடம் நோக்கி தொழுது, என்னுடைய பதிலுரையைத் தொடங்க விழைகிறேன்.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு, தொழில்நுட்பம் மற்றும் விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையில், இந்தத் துறை செயலாற்றிக்கொண்டு வருவதை நாம் நன்றாக அறிவோம்.

தமிழ்நாடு ஏறத்தாழ 15 இலட்சம் ஆண்டுகள் மனிதகுல வரலாற்றுத் தொன்மையை தன்னிடத்திலே கொண்டிருக்கக்கூடிய நிலப்பரப்பாக இருக்கிறது. தமிழ்நாட்டில் தொல்லியல் துறை அண்மையில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளின் அறிவியல் அடிப்படையிலான முடிவுகள் தமிழ்நாட்டினுடைய தொன்மை வரலாற்றின்மீது ஒரு புதிய வரலாற்று வெளிச்சத்தை பாய்ச்சி இருக்கிறது.

கழக அரசு பொறுப்பேற்ற 2021 ஆம் ஆண்டு தொடங்கிய ஆண்டு முதல் இதுவரை தமிழ்நாட்டில் 18 இடங்களில் அகழ்வாய்வுகள் பெருமளவிலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர், இந்த ஆண்டு கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் புதிதாக ஆகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக ஆணையிட்டிருக்கிறார்கள். மொழியினுடைய தொன்மையை நமக்கு பறைசாற்றுவதற்காக கீழடி, நிலப்பரப்பினுடைய தொன்மையை எடுத்துச்சொல்வதற்காக பட்டறைப்பெரும்புதூர், இரும்பின் தொன்மையை எடுத்துச்சொன்னது சிவகளை, தொழிலின் தொன்மையை எடுத்துச்சொன்னது கொடுமணல், நுண்கற்கால தொன்மையை எடுத்துச்சொன்னது வெம்பக்கோட்டை, புதிய கற்கால தொன்மையை நமக்கு எடுத்துச்சொன்னது சென்னானூர், அதே வரிசையில் கடல் வணிகத்தினுடைய தொன்மையை நமக்கு எடுத்துச்சொன்ன இடங்கள் பூம்புகாரும், கொற்கையும், இதே வரிசையில், கால வரிசையில் நீங்கள் வருவீர்களென்று சொன்னால், முதிர்ந்த வரலாற்றுக் காலத்தினுடைய தொன்மையை நமக்கு எடுத்துச்சொன்னது கங்கை கொண்ட சோழபுரத்திலே நாம் மேற்கொண்டிருக்கக்கூடிய அகழ்வாய்வுகள். இன்னும் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்திய பூபாகத்தில், தென்னிந்தியாவில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கும் முன்னர் கட்டப்பட்டிருக்கக்கூடிய அரண்மனையினுடைய பகுதிகளைக் கண்டறிந்த ஒரேயொரு அகழ்வாய்வு கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வாய்வு என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### இராமநாதபுரத்தில் புதிய அருங்காட்சியகம்!

இந்த அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பெற்றிருக்கக்கூடிய பல்வேறு தொல்பொருட்களை முறையான வகையில் சர்வதேச வகையிலே காட்சிப்படுத்துவதற்கு அருங்காட்சியகங்களை முதலமைச்சர் ஆணையில் பல்வேறு இடங்களிலே நாம் அமைத்துக்கொண்டு வருகிறோம். மிக முக்கியமாக மதுரை அருகே இருக்கக்கூடிய கீழடி அருங்காட்சியகம் இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்களை தன்னகத்திலே அது ஈர்த்துக்கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து பொருநை அருங்காட்சியகம், ஈரோடு மாவட்டத்திலே, தஞ்சை மாவட்டத்திலே அதேபோல இராமநாதபுரம் மாவட்டங்களிலே புதிய அருங்காட்சியகம் அமைப்பதற்கு முதலமைச்சர் இன்றைக்கு ஆணைகளை வழங்கி, அதற்கான பணிகள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அருங்காட்சியகப் பணிகளில் பொருநை அருங்காட்சியகப் பணிகள் என்பது இன்றைக்கு மிக வேகமாக நடைப்பெற்றுக்கொண்டு வருகிறது. ஏறத்தாழ 70 சதவிகிதப் பணிகள் முடிந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களாலே பொருநை அருங்காட்சியகம் மிக விரைவில் திறந்து வைக்கப்படுகிறது என்பதை நான் இங்கே பெருமகிழ்ச்சியோடு (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொருநை நதி பாயக்கூடிய நெல்லை மாவட்டத்திற்கு பல்வேறு சிறப்புகள் இருந்தாலும் அதிலே மிகக் குறிப்பான சிறப்பு பழந்தமிழர் காலந்தொட்டு வழங்கி இருக்கக்கூடிய ஐந்து வகை நிலப்பரப்புகள், ஐந்திணையும் உள்ளிருக்கக்கூடிய நிலப்பரப்புகளை அடங்கிய, உள் அடங்கிய ஒரு மாவட்டம் நெல்லை மாவட்டம் என்பதை நாம் பெருமைப்பட சொல்ல முடியும். குறிஞ்சித் திணையை எடுத்துக்கொண்டால் பொதிகை மலை இருக்கிறது; முல்லைத் திணைக்கு களக்காடு இருக்கிறது; மருத நிலத்திற்கு அம்பாசமுத்திரம் இருக்கிறது; சேரன்மாதேவி இருக்கிறது; கல்லிடைக்குறிச்சி இருக்கிறது; திருமவைகுண்டம் இருக்கிறது. நெய்தல் திணைக்கு நீங்கள் எடுத்து கொண்டால் கொற்கை இருக்கிறது, ஏன் பாலைத் திணைக்குக்கூட அந்த மாவட்டத்தினுடைய தேரிக்காடுகள் இருக்கிறது. எனவே ஐவகை திணைகளுக்கும், ஐவகை நிலப்பரப்புகளுக்கும் மிகமுக்கியமான ஒரு எடுத்துக்காட்டாக திகழக்கூடிய ஒரு நிலப்பரப்பு நெல்லை மாவட்டம் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு சொல்வேன். எனவே அதனுடைய அடிப்படையில் பொருநை அருங்காட்சியகம் என்பது திணை வகையிலே அமைக்கக்கூடிய வகையில் ஆதிச்சநல்லூரில் கூடங்கள் அதை அமைக்கிறபோது அது மருத நிலத்திற்கு, சிவகளை மருத நிலத்தை குறிப்பதாகவும், அதேபோல கொற்கை என்பது நெய்தல் நிலத்திற்கும், பாலை நிலத்திற்கும் உரியதாகவும், துலுக்கர்பட்டி என்பது முல்லை நிலத்திற்கு உரியதாகவும், இன்றைக்கு அந்தக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருவது தமிழர் உடைய தொன்மை நிலப்பரப்பினை அடையாளம் காட்டக்கூடிய வகையில், இவையெல்லாம் அமைக்கப்படவேண்டும் என்பதை முதலமைச்சர் எவ்வளவு ஆர்வமாக சுட்டிக்காட்டியிருக்கிறார் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் தொல்லியல் வரலாற்றில் மிக மிக முக்கியமான ஒரு மைல்கல்லாக இரும்பின் தொன்மையை கண்டறிந்தது அமைந்திருக்கிறது. சிவகளை, மாங்காடு, மயிலாடும்பாறை, தெலுங்கனூர் ஆகிய இடங்களில் கிடைத்த மாதிரிகளின் காலக்கணக்கீட்டின்படி அந்த ஆய்வின் முடிவில் அறிவுலகம் ஏற்றுக்கொண்டு பாராட்டிய முடிவுகளாக இந்திய திருநாட்டில் தமிழ்நாட்டில்தான் இரும்புக்கால பண்பாடு என்பது இன்றைக்கு 5,300 ஆண்டுகளுக்கு முன்பாகவே, (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு 3345 ஆண்டுகளுக்கு முன்பாக தொடங்கியதை முதலமைச்சர் பெருமையோடு அறிவித்தார்கள். இதன்வாயிலாக உலையிலிட்டு தாதுவில் இருந்து இரும்பை பிரிக்கக்கூடிய அந்தத் தொழில்நுட்பம் 5,300 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தியது உறுதியாகி இருக்கிறது. எனவே, முதலமைச்சர் சொன்னார்கள், இந்திய துணைக் கண்டத்தினுடைய வரலாறு இனி தமிழ் நிலப் பரப்பில் இருந்துதான் (மேசையைத் தட்டும் ஒலி) தொடங்கி, எழுதப்படவேண்டுமென்று அறிவித்ததை தொல்லியல் துறை மிகச்சரியாக இன்றைக்கு உறுதி செய்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அகழ்வாய்வுகள் எவ்வளவு முக்கியமாக இருக்கிறதோ அதைபோல, இந்தத் துறையினுடைய மிக முக்கியமாக ஒரு பகுதியாக இருக்கக்கூடிய கல்வெட்டியியல் துறையும் மிக முக்கியமாக பங்களிப்பை செலுத்தி வருகிறது. தமிழின் தொன்மைக்கும், செம்மொழி தகுதிக்கும் உரிய சான்றுகளை வழங்கியது தமிழ் கல்வெட்டுகள் என்பதை நாம் நன்றாக அறிவோம். சங்க இலக்கியங்களிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய மன்னர்கள், புறநானூற்றிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய பாண்டின் நெடுஞ்செழியன் பெயர் மதுரை மாங்குளத்திற்கு அருகே இருக்கக்கூடிய தமிழ் கல்வெட்டில் இருக்கிறது. அதேபோல கரூர் புகளூர் கல்வெட்டை நீங்கள் எடுத்துக்கொள் என்று சொன்னால் சேரமன்னர்களால் இருக்கக்கூடிய சேரமன்னன், செல்லிடும்பொறை, இளங்கடுங்கோ, பெருங்கடுங்கோ ஆகிய பெயர்கள் அங்கே தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கிறது. விழுப்புரம் மாவட்டம் ஜம்பையிலே இருக்கக்கூடிய கல்வெட்டுத்தான் நாம் 'சத்திய புத்தோ அதியன் நெடுமான் அஞ்சி' என்று சொல்லக்கூடிய அளவிற்கு எப்படி அசோகனுடைய கிர்னார் கல்வெட்டிலே சத்திய புத்தரர் என்று குறிக்கப்பட்டிருக்கிற அந்த வார்த்தை ஜம்பை கல்வெட்டிலே குறிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதன் வாயிலாக நான் உங்களுக்கு தெரிவிப்பது சங்க இலக்கியத்திலே குறிப்பிடக்கூடிய ஒவ்வொன்றுக்கும் புறச்சான்றுகளாக அந்த கருத்துகளுக்கு தொல்லியல் தளங்கள் நாம் மிக முக்கியமான சான்றுகளாக இன்றைக்கு இருக்கிறது. எனவே, சங்க இலக்கியம் என்பது வெறும் புனைவு இலக்கியங்கள் கிடையாது அவை முழுமையான வரலாற்றுப் பெட்டகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நிரூபிப்பதற்கு தொல்லியல் ஆய்வுகள் இன்றைக்கு நமக்கு மிகுந்த துணை இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும்கூட நான் ஒரு படி மேலே சென்று சொல்லவேண்டுமென்றால் கல்வெட்டுகளின் துணையோடுதான் ஒவ்வொரு மன்னர்களுடைய காலத்தையும் நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய மிகப்பெரிய கோயில்களாக இருக்கட்டும், வரலாற்று சின்னங்களாக இருக்கட்டும், அவற்றினுடைய உண்மையாக கால வகையை அறிந்துக்கொள்வதற்கு நமக்கு மிகுந்த உறுதுணையாக இருப்பது கல்வெட்டுகள்.

### தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு!

நான் இந்த அவைக்கு ஒரேயொரு செய்தியை சொல்ல விரும்புகிறேன். நாம் மிகப் பெருமையாகக் கொண்டாடக்கூடிய ஒரு கோயில் தமிழ்நாட்டிலே தஞ்சை பெரிய கோயில். தஞ்சை பெரிய கோயிலை மாமன்னன் ராஜராஜன் கட்டினான் என்பதை மிகவும் நன்றாக நாம் அறிவோம். ஆனால், ராஜராஜன்தான் அந்தக் கோயிலைக் கட்டினான் என்பதை 19 ஆம் நூற்றாண்டு வரை யாரும் தெரிந்துகொள்ளவில்லை. பலபேர் என்ன நம்பினார்கள் என்று கேட்டால், அது கரிகால் பெருவளத்தான் கட்டிய கோயில் என்று சொன்னார்கள். இன்னும் சிலர் இல்லை, நாயக்க மன்னர்களும், மராத்திய மன்னர்களும் கட்டினார்கள் என்று சொன்னார்கள். இன்னும் சில பாமர மக்கள் என்ன நம்பிக் கொண்டிருந்தார்களென்று சொன்னால், ஒரே இரவிலே புதங்களெல்லாம் வந்து அதைக் கட்டிவிட்டதாகக்கூட ஒரு கருதுகோள் இருந்தது. ஆனால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலே ஜெர்மானிய அறிஞர் Hultzsch அவருடைய உதவியாளராக இருந்த வெங்கையா ஆகிய இரண்டுபேரும்தான் தஞ்சை பெரிய கோயிலினுடைய கல்வெட்டுகளை முறையாகப் படித்தார்கள். மாமன்னன் ராஜராஜனுடைய புகழ்



பெற்ற மெய்கீர்த்தி 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்குயுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கை பாடியும் தடிகைபாடியும் நுளம்பபாடியும்' என்று ஆரம்பிக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாமன்னனினுடைய அந்தக் கல்வெட்டு வரிகளை அந்த அறிஞர்கள் படித்தார்கள். 'பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்க்கு நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் ஸ்ரீ விமானத்திலே வெட்டி அருள்க' என்று திருவாய் மொழிந்து அருளினபடி என்று ராஜராஜன் சொன்னதை கல்வெட்டிலே வெட்டியதைப் படித்ததற்குப் பிறகுதான் அந்தக் கோயில் ராஜராஜன் சோழனால் கட்டப்பட்டது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்வேன். ராஜராஜனுக்கு எவ்வளவோ பெருமைகள் இருக்கலாம். ஆனால், ராஜராஜன் தான் கொடுத்தக் கொடைகளிலே நான் எடுப்பித்த திருக்கற்றளி என்ற சொன்னபோது நான் எடுப்பித்தேன். அதிலே நான் கொடுத்த கொடைகள் மட்டுமல்ல; என்னுடைய வீட்டில் இருக்கக்கூடிய பெண்கள் கொடுத்தது;

என்னுடைய தமக்கை குந்தவை கொடுத்தது; இன்னும் ஒருபடி மேலே சொன்னால் கொடுப்பார் கொடுத்தது நாட்டு மக்கள் எல்லாம் யார் யார் கொடுத்தார்களோ அவற்றையெல்லாம் மன்னனுக்குச் சமமாக அவற்றையும் இந்த விமானத்திலே பொறித்து அருளுக என்று சொன்ன ஒரே மன்னன் ராஜராஜன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை எடுத்துக்காட்டிய கல்வெட்டு தஞ்சை கல்வெட்டு என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்வேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவிலே கிடைக்கக்கூடிய கல்வெட்டுகளில் மிக அதிகமான கல்வெட்டுகள் தமிழ் கல்வெட்டுகள். அந்தக் கல்வெட்டுகளையெல்லாம் கால வரிசையிலே தொகுக்கக்கூடிய பணியை தொல்லியல் துறை மேற்கொண்டு வருகிறது.

## மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கல்வெட்டு அருங்காட்சியகம்!

அதேபோல, கடந்த ஆண்டு மிக முக்கியமான ஒரு நிகழ்வு. சிந்து சமவெளி நாகரிகத்தில் சர் ஜான் மார்ஷல் அவர்களினுடைய கண்டுபிடிப்பினை உலகிற்கு அறிவித்து, நூற்றாண்டு நிறைவுற்றதையொட்டி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தோடு இணைந்து ஜனவரி 5, 6, 7 நாட்களில் பன்னாட்டு கருத்தரங்கத்தை முதலமைச்சர் நடத்தினார்கள். முதலமைச்சர் அந்த நிகழ்ச்சியிலே அறிவித்ததைப்போல, சர் ஜான் மார்ஷல் அவர்களின் சிலையை அருங்காட்சியகத்திலே அண்மையிலே திறந்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, அகழாய்வுகளிலே கிடைத்திருக்கக்கூடிய பல்வேறு குறியீடுகள், பானை ஓடுகளிலே இருக்கக்கூடிய குறியீடுகளையெல்லாம் தொகுக்கக்கூடிய வகையிலே 15,000 குறியீடுகளை நாம் இன்றைக்கு தொகுத்திருக்கிறோம். அந்த 15,000 குறியீடுகளில் சிந்து வெளியிலே கிடைத்திருக்கக்கூடிய அந்த முத்திரைகள், பானையோடுகளோடு ஒப்புவமை நோக்கி நாம் ஓர் ஆய்வினை மேற்கொண்டிருக்கிறோம். இதிலே முத்திரைகளைப் பொறுத்தமட்டில், 60 சதவிகிதமும், பானை ஓடுகளைப் பொறுத்தமட்டில் 90 சதவிகிதமும், நமக்கு இங்கே பானை ஓடுகளில் கிடைத்திருக்கக்கூடிய குறியீடுகளுக்கும், சிந்துவெளியிலே கிடைத்திருக்கக்கூடிய குறியீடுகளுக்கும் ஒப்புவமை இருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய அடிப்படையில் சிந்துவெளி வரி வடிவங்களும், தமிழ்நாடு குறியீடுகளும் ஒரு வடிவியல் ஒப்பாய்வு என்ற ஓர் அருமையான நூலினை முதலமைச்சர் இங்கே வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து இந்தத் துறை பாறை ஓவியங்களை ஆவணப்படுத்தக்கூடிய திட்டம், தொல்லியல் மற்றும் வரலாற்று அடிப்படை நிலவரைப்பட திட்டம்–Archaeological and Historical Atlas of Tamil Nadu என்று மிக அழகான வகையிலே அந்த நூலையும் வெளியிட்டிருக்கிறோம்.

## 12 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிப்பு!

### பானை ஓடு குறியீடுகள்!

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு சிற்பங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. கோயில்களிலே சிற்பங்கள் இருக்கின்றன. ஆனால், பல இடங்களிலே உதிரி சிற்பங்களாக, பல இடங்களிலே சிற்சில குடைவரைகளாக இருக்கிறது. எனவே, பாதுக்காக்கப்பட்ட சின்னங்களாக அவைகளை உருவாக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் ஏறத்தாழ இதுவரை தமிழ்நாட்டில் தொல்லியல் துறையின் மூலமாக 117 இடங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக வந்திருக்கின்றன. கழக ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நான்கு ஆண்டுகளில் 21 இடங்களிலே இன்றைக்கு பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அவற்றை மாற்றியிருப்பதற்கு காரணம், தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் இருக்கக்கூடிய ஒவ்வோர் ஊர்களுக்கும் ஒவ்வொரு பெருமை இருக்கிறது.

நான் பெருமையோடு சொல்ல வேண்டும் என்றால், இந்த மன்றத்திலேகூட ஒருமுறை நான் பேசுகின்றபோது குறிப்பிட்டதாக எனக்கு நினைவு இருக்கிறது. திருவாரூரை எடுத்துக்கொண்டால், 'திருவாரூர் தேரழகு, திருவிடைமருதூர் தெருவழகு, கும்பகோணம் கோயிலழகு, மன்னார்குடி மதிலழகு, வேதாரண்யம் விளக்கழகு, ஸ்ரீரங்கம் நடையழகு, பாபநாசம் படியழகு' (மேசையைத் தட்டும் ஒலி) என ஒவ்வொன்றுக்கும் மிக அருமையான ஓர் அழகை சொல்லக்கூடிய ஒவ்வொரு இடங்களும் நமக்கு இருக்கிறது. எனவேதான், பழைய காலத்திலே சிற்ப வேலைபாடு செய்பவர்கள்கூட இங்கே இருக்கக்கூடிய மிக முக்கிய நுண்ணிய வேலைபாடுகளை நீக்கித்தான் இந்த வேலையை செய்வோம் என்று

குறிப்பாக, தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழியில் இருக்கக்கூடிய பலகணி, திருவிழிமிமலையில் இருக்கக்கூடிய வௌவால்நத்தி மண்டபம், நனி வெள்ளிவிமானம், கடாரம் கொண்டான் மதில், அதேபோல தாரமங்கலம் சிற்பங்கள், ஆவுடையார்கோயில் கொடுங்கை என்று இருக்கக்கூடிய மிக முக்கியமான சிற்பங்களை எங்களால் செய்ய முடியாது என்று புறனடை நல்கக்கூடிய அளவிற்கு சிற்பச் செல்வம் வாய்ந்திருக்கக்கூடிய பூமி தமிழ்நாடு பூமி என்பதை நான் இங்கே சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சிற்பங்களெல்லாம் பார்ப்பதற்கும் மிக அற்புதமான திட்டங்களை முதலமைச்சர் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லி, இந்தத் துறை தொடர்ச்சியாக தன்னுடைய பணிகளை மிகச் சிறப்பான வகையில் செய்திருக்கிறது.

இங்கே ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, செந்தில்நாதன், கீழடியில் இருக்கக்கூடிய அகழ்வாய்வகத்திற்கு நிதியை ஒதுக்க வேண்டும், அந்தப் பணிகளுக்கான நில உடைமையாளர்களுக்கு நிதி தருவதற்கு நிதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். முதலமைச்சர், ஏறத்தாழ ரூ.8.2 கோடி அதற்காக நிதி ஒதுக்கி, நில உடைமையாளர்களுக்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த நிதி அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் துறைக்கு அது பட்டா மாறுதல் செய்யப்படும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல, உரையாற்றிய அண்ணன் சேவூர் S. இராமச்சந்திரன் பூசிமலைக்குப்பம் பகுதியில் பழமைவாய்ந்த ராணி மாளிகையை பாதுகாக்க நினைவுச் சின்னமாக அமைக்க வேண்டும் என்றும், சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில், ஆறு இடங்கள் அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. பூசிமலைக்குப்பம் பகுதி, ராணி மாளிகையை பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

உறுப்பினர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, பழங்கால அரண்மனைகள், கோட்டைகள் இவற்றையெல்லாம் புனரமைத்து பாதுகாக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திருமலைநாயக்கர் மஹால் அந்த வகையில் ஏறத்தாழ ரூ.8.27 கோடி செலவிலும், தரங்கபாடியில் இருக்கிற கவர்னர் மாளிகை ரூ.4.46 கோடியிலும், தஞ்சை அரண்மனை தர்பார் ஹால் ரூ.7 கோடி மதிப்பீட்டிலும் தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தஞ்சை அரண்மனை புகழ்பெற்ற ஷார்ஜா மாடி ரூ.10 கோடியிலும், டேனிஷ் கோட்டை ரூ.3.7 கோடியிலும், திருமலைநாயக்கர் மஹாலில் இருக்கக்கூடிய பல்வேறு பணிகள் ரூ.3 கோடியிலும் நிறைவேற்றப்பட்டு கொண்டிருக்கின்றன.

உறுப்பினர், டாக்டர் சி. விஜயபாஸ்கர், கொடும்பாலூர் கோயிலை நாம் சிறப்பான முறையில் பராமரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது ASI – Archaeological Survey of India, மத்திய தொல்பொருள் அளவீட்டு துறையின்கீழ் வருகிற காரணத்தால், அதில் நம்மால் நேரடியாக செய்ய முடியாவிட்டாலும்கூட, கொடும்பாலூர் கோயில் மிக முக்கியமான கோயில் என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். எனவே, தமிழ்நாடு அரசின் சார்பில் அதை பராமரிக்க வாய்ப்பிருந்தால் அதையும் நிச்சயமாக அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையின் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, மிகக் குறிப்பாக துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. மணிவாசன், ஆணையர் உதயசந்திரன், அதன் ஆலோசகர் ராஜன், கூடுதல் இயக்குநர் சிவானந்தம் ஆகியோர் துணை இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கும், தொல்லியல் துறை அறிஞர்களுக்கும், என்னுடைய அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள்

**1. கீழடி அருங்காட்சியகம், பொருநை அருங்காட்சியகம், தரங்கம்பாடி கோட்டை ஆகியவற்றில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஒலி–ஒளிக் காட்சி அமைக்கப்படும்.**

தமிழ் பண்பாட்டின் தொன்மையையும் மேன்மையையும் வெளிப்படுத்துகின்ற கீழடி அருங்காட்சியகம், சிந்துவெளியில் செம்புக்காலப் பண்பாடு நிலவியபோது தமிழ் நிலப்பரப்பில் இரும்புக்காலப் பண்பாடு நிலவியது என்பதை நிறுவிய சிவகளை, ஆதிச்சநல்லூர் ஆகிய தொல்லியல் தளங்களின் சிறப்பினை வெளிப்படுத்தும் பொருநை அருங்காட்சியகம் மற்றும் தரங்கம்பாடி கோட்டை ஆகியவற்றில் சுற்றுலாவினை ஊக்குவிக்கும் வகையிலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையிலும் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஒலி–ஒளிக் காட்சி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. தமிழ்மொழியின் தொன்மையையும், பண்டைய தமிழ்நாட்டு அரசியல், சமூகப் பொருளாதார வரலாற்றைப் பறைசாற்றுகின்ற கல்வெட்டுகளை காலவாரியாகத் தொகுத்து "கல்வெட்டு அருங்காட்சியகம் மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் அமைக்கப்படும்.**

தமிழ் மொழியை செம்மொழி ஆக அறிவிக்க 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்புக் கொண்ட கல்வெட்டுகள் துணை நின்றன. மேலும், தமிழ்மொழியின் தொன்மை, பண்டைய தமிழ்நாட்டின் பண்பாடு, அரசியல், சமூகப் பொருளாதார நிலையினை வெளிக்காட்டுகின்ற காலக் கண்ணாடியாக கல்வெட்டுகள் திகழ்கின்றன. இக்கல்வெட்டுகளின் வாயிலாக தமிழ் எழுத்து வளர்ச்சி, சமூகப் பொருளாதாரச் செய்திகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் "கல்வெட்டு அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**3. அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் ஆகிய வரலாற்றுச் சான்றுகளை வெளிக்கொணரும் வகையில் தேசியக் கருத்தரங்கம் ரூ.30 இலட்சம் செலவில் நடத்தப்படும்.**

வரலாற்றினை எழுதுவதற்கு கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் போன்றவை முதன்மைத் தரவுகளாகத் திகழ்கின்றன. தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் பல்வேறு கல்வெட்டு வல்லுநர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், தன்னார்வலர்கள் புதிய கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் நாணயங்களையும் கண்டறிந்து வருகின்றனர். அவற்றினை ஆராய்ந்து புதிய வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொணர்ந்து வருகின்றனர். அத்தகைய வரலாற்றுச் செய்திகளை ஒருங்கிணைக்கும் வகையில் தேசியக் கருத்தரங்கம் ரூ.30 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

**4. தமிழ்நாட்டு வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் வணிகக்குழுக் கல்வெட்டுகள், பெருவழிக் கல்வெட்டுகள், செக்குக் கல்வெட்டுகள், தூம்புக் கல்வெட்டுகள், நடுகற்கள் ஆகியவற்றினை மின்பதிப்பாக்கம் செய்து நூல் வடிவிலும் இணையத்திலும் வெளியிடப்படும்.**

தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊர்களிலும் பல்வேறு வகையான தொல்லியல் எச்சங்கள் காணப்படுகின்றன. அவை அவ்வூரின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன. தமிழி எழுத்துக் கல்வெட்டுகள், நடுகற்கள், வணிகக்குழுக் கல்வெட்டுகள், பெருவழிக் கல்வெட்டுகள், செக்குக் கல்வெட்டுகள், உள்ளூர் வழிபாட்டில் இருந்த அய்யனார், கொற்றவை, மூத்தோள், சேயோன், குடைவரைக் கோயில்கள், தூம்புக் கல்வெட்டுகள் ஆகியவை அவ்வூரின் தொன்மைக்கு சான்று பகர்கின்றன. இத்தகைய தொல்லியல் சின்னங்கள் அன்றைய சமூகப் பொருளாதார நிலையினையும் வழிபாட்டு முறைகளையும் அறிந்துகொள்ள உதவுகின்றன.

இவற்றில் தற்பொழுது வணிகக்குழுக் கல்வெட்டுகள், பெருவழிக் கல்வெட்டுகள், செக்குக் கல்வெட்டுகள், தூம்புக் கல்வெட்டுகள், நடுகற்கள் ஆகியவற்றினை தொகுத்து மின்பதிப்பாக்கம் செய்து நூல் வடிவிலும் இணையத்திலும் வெளியிடப்படும்.

**5. தமிழ்நாட்டின் ஒவ்வொரு பண்பாட்டு மண்டலத்தின் தனித்தன்மையை பிரதிபலிக்கின்ற வகையில் "தமிழ்நாட்டின் பண்பாட்டு வாலாறு என்கிற ஒரு தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பண்பாட்டு மண்டலமும் ஒவ்வொரு வகையில் தனித்தன்மை பெற்று தமிழ்நாட்டின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. தமிழ்நாட்டின் பண்பாட்டு நிலப்பரப்பின் வளத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு குறு வட்டாரத்தின் செழுமையை உள்ளடக்கிய தொல்லியல் வரலாற்றுச் செய்திகள் தொடர் தொகுதிகளாக 18 தொகுதிகள் கொண்டுவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பண்பாட்டு வரலாற்றினை முழு அளவில் அறிவதற்கு வழிவகுக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்படும்.

## அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கு பயனுதவித்தொகை உயர்வு!

**6. நிலவியல் மற்றும் வரலாற்றுப் பின்னணியில் திணை நிலவரைபடம் உருவாக்கும் திட்டம் ரூ.12 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும்.**

தமிழ் நிலப்பரப்பினை நிலவியல் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரிப்பர். சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள், நிலவியல் சான்றுகளைத் திரட்டி அதன்வாயிலாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள நிலவியல் மற்றும் வரலாற்றுப் பின்னணியில் திணை நிலவரைபடம் தயாரிக்கும் திட்டம் ரூ.12 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்படும்.

**7. அண்மைக்கால தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் மற்றும் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் காலனித்துவத்திற்கு முந்தைய காலம் வரையிலான வாலாற்றைப் பாடநூல் வடிவில் "தமிழ் நாட்டு வரலாற்று நூல்கள் வரிசை என்ற தலைப்பில் வெளிக்கொணரப்படும்.**

தமிழ்நாட்டில் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் வாயிலாக பல்வேறு தொல்லியல் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. குறிப்பாக தமிழ் நிலப்பரப்பில் முதன்முதலாக இரும்பு உருக்கும் தொழில்நுட்பம் உருவாயிற்று. சிந்துவெளியில் செம்புக் காலம் நிலவியபோது தமிழ்நாட்டில் இரும்புக்காலம் நிலவியது. சிந்துவெளியில் கிடைக்கின்ற முத்திரை மற்றும் மட்பாண்ட ஓடுகளில் கிடைக்கின்ற வரிவடிவங்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற குறியீடுகளுடன் முறையே 60 சதவீதமும், 90 சதவீதமும் இணையாக உள்ளன. பண்பாட்டு அடிப்படையிலும் பல்வேறு ஒற்றுமைகள் நிலவுகின்றன மற்றும் தொடக்க வாலாற்றுக்காலம் தொடங்கி காலனித்துவத்திற்கு முந்தைய காலம் வரையிலான கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் போன்ற தரவுகளின் வாயிலாக புதிய கண்டுபிடிப்புகள் வெளியிடப்படுகின்றன. இச்சான்றுகளின் அடிப்படையில் வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் காலனித்துவத்திற்கு முந்தைய காலம் வரையிலான வரலாற்றை பாடநூல் வடிவில் தமிழ்நாட்டு வரலாற்று நூல்கள் வரிசை என்ற தலைப்பில்வெளிக்கொணரப்படும்.

**8. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் "சுவடியியல் என்னும் ஓராண்டு பட்டயப் படிப்பு ரூ.31 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.**

தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் ஈராண்டு தொல்லியல், கல்வெட்டியல், மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியல் ஆகிய முதுநிலைப் பட்டய படிப்புகளில் 80 மாணவர்கள் பயின்று வருகின்றனர். தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் 70,000–க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படுகின்றன. இந்நூலகத்திலுள்ள ஓலைச்சுவடிகளில் படித்தறியப்படாத ஓலைச்சுவடிகளை கண்டறிந்து, பதிப்பித்து நூலாக வெளியிடவும், ஓலைச்சுவடிகளை முறையாக பாதுகாக்கவும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தின் வாயிலாக சுவடியியல் என்னும் ஓராண்டு பட்டயப் படிப்பு துவங்கப்படும். எட்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும் தலா ரூ.8,000 பயிலுதவியாக வழங்கப்படும். 2025–2026 ஆம் ஆண்டு முதல் ரூ.31 இலட்சம் தொடரும் செலவினமாக வழங்கப்படும்.

**9. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கு தற்பொழுது மாதந்தோறும் வழங்கிவரும் கல்வி பயிலுதவித் தொகை ரூ.6,000/–லிருந்து ரூ.8,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில் நடைபெற்றுவரும் ஈராண்டு தொல்லியல் கல்வெட்டியல், மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியல் ஆகியப் பாடப் பிரிவுகளில் முதுநிலைப் பட்டயம் பயின்றுவரும் மாணவர்களுக்கு தற்பொழுது மாதந்தோறும் வழங்கிவரும் கல்வி பயிலுதவித் தொகையானது ரூ.6,000/–லிருந்து ரூ.8,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ள சுவடியியல் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கும் ரூ.8,000/– ஆக வழங்கப்படும்.

**10. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 12 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.**

திருநெல்வேலி மாவட்டம் மன்னார்கோயில் ஊரிலுள்ள தமிழிக் கல்வெட்டு, சிவகங்கை மாவட்டம் அரளிப்பட்டியிலுள்ள குடைவரை, திண்டுக்கல் மாவட்டம் கூத்தபூண்டியான் வலசு என்ற ஊரிலுள்ள குடைவரைகள், புதுக்கோட்டை மாவட்டம் வி. கோட்டையூரிலுள்ள குடைவரை, திருவண்ணாமலை மாவட்டம் ஆவூரிலுள்ள குடைவரை, விழுப்புரம் மாவட்டம் நாயனூர் கிராமத்திலுள்ள முற்றுப்பெறாத குடைவரை, கிருஷ்ணகிரி மாவட்டம் மல்லச்சந்திரம் பெருங்கற்கால கல்திட்டைகள், இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊரிலுள்ள அரண்மனை, விருதுநகர் மாவட்டம் நரிக்குடி மறையூர் சத்திரம், விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டம் மீனாட்சிபுரம் வானிறைக்கல், குகைஓவியம் மற்றும் புடைப்புச் சிற்பங்கள், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மம்சாபுரம் கிராமத்திலுள்ள நாயக்கர் கால மண்டபம், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் பிள்ளையார் நத்தம் மண்டபம் ஆகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 12 வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்படும் என்கின்ற மகத்தான அறிவிப்பையும் முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அறிவித்து, மன்ற உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கையினை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.)

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரையில் தெரிவித்தார்.